DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.

CC. No.480/2025

PW – 1

| | | |
|---|---|---|
| Name | : | **ராணி ( LW. 1 )** |
| Father's / Husband Name | : | க/பெ.ராஜீ |
| Village | : | ஆண்டிப்பட்டி புதூர் |
| Taluk | : | நாமக்கல் |
| Calling | : | கூலி |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.07.2026** தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எனது கணவர் மேஸ்திரி வேலை செய்து வந்தார். கடந்த 21.12.2024 ம்தேதி சனிக்கிழமை அவர் கூலிப்பணம் வாங்குவதற்காக நாமக்கல்லுக்கு TVS XL இருசக்கர வாகனத்தில் மாலை சுமார் 04.30 மணியளவில் எங்கள் வீட்டில் இருந்து புறப்பட்டார். பிறகு மாலை சுமார் 05.30 மணியளவில் ஒரு நபர் எனக்கு செல்போனில் தொடர்பு கொண்டு வள்ளிபுரம் கரூர் – சேலம் பைபாஸ் மேம்பாலம் அருகே மாலை சுமார் 05.00 மணிளவில் எனது கணவர் மீது அவருக்கு பின்னால் வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் எனது கணவருக்கு தலையில் அடிப்பட்டு, காதில் இரத்தம் வந்தது அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல் அரசு மருத்தவமனைக்கு கொண்டு சென்றுள்ளதாகவும், அங்கு மருத்துவர் பரிசோதித்து பார்த்து இறந்துவிட்டதாக சொன்னதாகவும் கூறினார். நான் உடனே அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று எனது கணவரின் உடலை பார்த்தேன். பிறகு நல்லிபாளையம் காவல் நிலையத்தில்புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். **புகார் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகி**றது. நான் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்த போலிசார் எனது கணவர் உடலின் மீது பிரதே விசாரணை மற்றும் உடற்கூறாய்வு செய்து எங்கள் வசம் ஒப்படைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) சாட்சி பூபதி எனது மகன், பூவிழி எனது மகள். முருகேசன் எனது உறவினர். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்தை நான் நேரில் பார்க்காததால் யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையொப்பம் செய்தார்.

ஒம்/–S.தினேஷ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.

CC. No.480/2025

PW – 2

| | | |
|---|---|---|
| Name | : | பூபதி **( LW. 2 )** |
| Father's / Husband Name | : | த/பெ.ராஜீ |
| Village | : | ஆண்டிப்பட்டி புதூர் |
| Taluk | : | நாமக்கல் |
| Calling | : | கூலி |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.07.2026** தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எனது அப்பா மேஸ்திரி வேலை செய்து வந்தார். கடந்த 21.12.2024 ம்தேதி அவர் கூலிப்பணம் வாங்குவதற்காக நாமக்கல்லுக்கு TVS XL இருசக்கர வாகனத்தில் மாலை சுமார் 04.30 மணியளவில் எங்கள் வீட்டில் இருந்து புறப்பட்டார். பிறகு மாலை சுமார் 05.00 மணியளவில் ஒரு நபர் எனக்கு செல்போனில் தொடர்பு கொண்டு வள்ளிபுரம் கரூர் – சேலம் பைபாஸ் மேம்பாலம் அருகே எனது அப்பாவின் மீது பின்னால் வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் எனது அப்பாவிற்கு தலையில் அடிப்பட்டு, காதில் இரத்தம் வந்தது அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல் அரசு மருத்தவமனைக்கு கொண்டு சென்றுள்ளதாகவும், அங்கு மருத்துவர் பரிசோதித்து பார்த்து இறந்துவிட்டதாக சொன்னதாகவும் கூறினார். நான் உடனே அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று எனது அப்பாவின் உடலை பார்த்தேன். பிறகு நல்லிபாளையம் காவல் நிலையத்தில் எனது அம்மா புகார் கொடுத்தார். போலீசார் எனது அப்பாவின் உடலின் மீது பிரதே விசாரணை மற்றும் உடற் கூறாய்வு செய்து எங்கள் வசம் ஒப்படைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்தை நான் நேரில் பார்க்காததால் யாருடைய

கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையொப்பம் செய்தார்.

ஒம்/–S.தினேஷ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.

CC. No. 480/2025

PW – 3

| | | |
|---|---|---|
| Name | : | புவனேஸ்வரி **( LW. 3)** |
| Father's / Husband Name | : | க/பெ.குணசேகரன் |
| Village | : | சின்னகாக்காவேரி |
| Taluk | : | இராசிபுரம் |
| Calling | : | கூலி |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.07.2026** தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:-**

1) நான் தற்போது மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எனது அப்பா மேஸ்திரி வேலை செய்து வந்தார். கடந்த 21.12.2024 ம்தேதி அவர் கூலிப்பணம் வாங்குவதற்காக நாமக்கல்லுக்கு TVS XL இருசக்கர வாகனத்தில் மாலை சுமார் 04.30 மணியளவில் எங்கள் வீட்டில் இருந்து புறப்பட்டார். பிறகு மாலை சுமார் 05.30 மணியளவில் எனது அண்ணன் எனக்கு செல்போனில் தொடர்பு கொண்டு வள்ளிபுரம் கரூர் – சேலம் பைபாஸ் மேம்பாலம் அருகே எனது அப்பாவின் மீது மாலை 05.30 மணியளவில் பின்னால் வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் எனது அப்பாவிற்கு தலையில் அடிப்பட்டதாகவும், அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல் அரசு மருத்தவமனைக்கு கொண்டு சென்றுள்ளதாகவும், அங்கு மருத்துவர் பரிசோதித்து பார்த்து இறந்துவிட்டதாக சொன்னதாகவும் கூறினார். நான் உடனே அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று எனது அப்பாவின் உடலை பார்த்தேன். பிறகு நல்லிபாளையம் காவல் நிலையத்தில் எனது அம்மா புகார் கொடுத்தார். போலீசார் எனது அப்பாவின் உடலின் மீது பிரதே விசாரணை மற்றும் உடற் கூறாய்வு செய்து எங்கள் வசம் ஒப்படைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்தை நான் நேரில் பார்க்காததால் யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு

சொல்லமுடியாது என்றால் சரிதான். எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையொப்பம் செய்தார்.

ஒம்/–S.தினேஷ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.

CC. No. 480/2025

PW – 4

| | | |
|---|---|---|
| Name | : | பெரியசாமி **( LW.7 )** |
| Father's / Husband Name | : | க/பெ.வீரன் |
| Village | : | குப்பம்பாளையம் |
| Taluk | : | பரமத்திவேலூர் |
| Calling | : | கூலிவேலை |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.07.2026** தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எனது சின்னமாமனார் ராஜு என்பவர் மேஸ்திரி வேலை செய்து வந்தார். கடந்த 21.12.2024 ம்தேதி அவர் கூலிப்பணம் வாங்குவதற்காக நாமக்கல்லுக்கு TVS XL இருசக்கர வாகனத்தில் மாலை சுமார் 04.30 மணியளவில் எங்கள் வீட்டில் இருந்து புறப்பட்டார். பிறகு மாலை சுமார் 05.30 மணியளவில் எனது உறவினர் எனக்கு செல்போனில் தொடர்பு கொண்டு வள்ளிபுரம் கரூர் – சேலம் பைபாஸ் மேம்பாலம் அருகே ராஜுவின் மீது மாலை 05.30 மணியளவில் பின்னால் வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் அவருக்கு தலையில் அடிப்பட்டதாகவும், அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல் அரசு மருத்தவமனைக்கு கொண்டு சென்றுள்ளதாகவும், அங்கு மருத்துவர் பரிசோதித்து பார்த்து இறந்துவிட்டதாக சொன்னதாகவும் கூறினார். நான் உடனே அரசு மருத்துவமனை சென்று ராஜு என்பவரை பார்த்தேன். பின்னர் நல்லிபாளையம் போலிசார் அடுத்த நாள் விபத்து நடந்த இடத்திற்கு காலை 07.00 மணியளவில் வந்து விசாரித்து படம் வரைந்தார்கள். அதில் நானும், செந்தில் குமார் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. **அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) போலீசார் கேட்டுகொண்டதற்கு இணங்க தான் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரி. கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரி.

**மறு விசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையொப்பம் செய்தார்.

ஒம்/–S.தினேஷ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.